[1968 பிப்ரவரி 13

(இ) ஆம் எனில், அப்படி பாதிக்கப்பட்டவர்களை மறுபடியும் பழைய இலாகாவிற்கே மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) ஒரு பணியாளரைத் தவிர வேறு கடைநிலைப்பணியாளர் எவரும் சம்பளத்திலும் ஓய்வு ஊதியத்திலும் பாதிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட பணியாளரும் சொந்த துறைக்குத் திருப்பியனுப்பப்பட ஆவன செய்யப்படுகிறது. இதனால் பணியாளரின் சம்பளம், ஓய்வு ஊதியம் பாதிக்கப்படமாட்டாது. மேலும், சொந்த துறைக்குத் திரும்பிச் செல்ல விழையும் பணியாளரையும் திருப்பியனுப்ப ஆவன செய்யப்படுகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஒரே ஒரு கடைநிலை ஊழியர் தான் பாதிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது யார் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப் பற்றிய விவரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவையுரிமைக் கேள்விகள் திரு. இளம்வழுதி அவர்களுடைய அவையுரிமைக் கேள்வியை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு பேரவை முன்னவர்—லீடர் ஆஃப் தி ஹவுஸ்— அவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாளை வரை அது தள்ளி வைக்கப்படுகிறது.

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) கோவையில் நடந்த சம்பவங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம். அந்தத் தீர்மானத்தை இன்றைக்குப் படித்துவிட்டு, அந்த தீர்மானம் எப்படி விதி 50 (viii)-க்குள் வருகிறது, அதாவது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இல்லை என்பதைப் பற்றி நாளைக்கு விளக்கிப் பேசுவார்கள். இன்றைக்கு தீர்மானத்தை அவைமுன் வைப்பார்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir.

I have given notice of the following adjournment motion :—

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, viz.,

'The occurrence in Coimbatore on 8th February 1968 at the Congress Meeting held in the V.O.C. Park when indiscriminate throwing of stones and brickbats happened and Hon. Sri

1968 பிப்ரவரி 13]

K. S. Ramaswamy, Union Deputy Home Minister received severe injuries, and the people were lathi-charged on the dais where Sri C. Subramaniam, President, Tamilnad Congress Committee, myself and other Congress leaders were standing '."

நாளைக்கு இதனுடைய விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எப்படி இது விதி 50 (viii)-க்குள் வருகிறது, அதாவது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் இல்லை என்பதை விளக்கிச் சொல்லுங்கள்.

அடுத்து திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம்.

(ii) கோதையார் நீர் மின்விசைத் திட்டப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

THIRU J. JAMES : Sir, I have given notice of the following adjournment motion :—

" That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely,

' The fire which broke out on 4th February 1968 at the Kodayar Hydro Electric project area in the Kanyakumari district where about 400 houses were destroyed and 25,000 poor people were rendered houseless and incurred a loss of about Rs. 1,50,000 and the need to render urgent relief by this Government '."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தின் காரணமாக அங்கே பலருக்கு இடையூறுகளும் இடைஞ்சல்களும் ஏற்படுகிற அளவுக்கு அங்கே சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் தீ விபத்துக்கள் இப்படி ஏற்படுகிறபொழுது எந்த அடிப்படையிலே நாம் நிவாரணம் அளிப்பது என்பது பற்றி சட்டத் தடுப்புகளும் மற்ற முறைகளும் இருக்கின்றன. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எடுத்துக் கொள்ளுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முறைப்படி அந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இந்த சபையை ஒத்தி வைத்து அங்குள்ள நிலைமையை விவாதிப்பதன் மூலம் புதிய நிலைமைகள் ஏற்படப் போவது இல்லை. எனவே, இந்த சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதிகாரிகளும் முறைப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிற காரணத்தால் இந்த சபையை ஒத்திவைக்க வேண்டிய தேவை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் என்பதால் இதற்கு என்னுடைய அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து திரு. கோதண்டராமன் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம்.